**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 7/2017</u>**

நாள் 3.03.2026

PW1 – கன்னியம்மாள்

க/பெ – நாராயணசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of March 2026)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. பழனிசாமி, ராமசாமி, சுப்பிரமணி ஆகியோர் எனது சகோதரர்கள். அதேபோல் ராமாத்தாள், பழனாத்தாள் ஆகியோா் என்னுடன் பிறந்த சகோதரிகள். வழக்கு சொத்தில் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து முழவதும் நத்தம் புறம்போக்கு இடம் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்.36 என்றால் சரிதான். அந்த சொத்திற்கு 1993 ம் ஆண்டில் ரீ சர்வே எண்.340/1 என்று உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து எனது சகோதரர்களான பழனிசாமி, ராமசாமி, சுப்பிரமணி ஆகியோர்களது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்தானது கிராம நத்தம் பூமியாக இருந்து அதை பழனிசாமி, ராமசாமி, சுப்பிரமணி ஆகியோர்கள் அனுபவித்து வந்ததன் பேரில் அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றும், பின்னிட்டு சுப்பிரமணி அவருக்குரிய 1/3 பங்கை பொறுத்து பழனிசாமிக்கு 27.03.2000 தேதியில் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்து விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவர் நாராயணசாமி திருமணமான பிறகு சுமார்

15 வருடம் கழித்து இறந்துபோய்விட்டார். எனது தகப்பனார் சென்னியப்ப தேவர் 1982ம் ஆண்டில் இறந்துபோய்விட்டார். எனது அப்பா இறந்து 35 ஆண்டுகள் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்தபிறகு எனது சகோதரர்கள் அவர்களுக்குரிய தாவா சொத்தில் ஒரு பகுதியில் எனது ஆயுள்காலம் வரையில் வசித்து கொள்ளுமாறு சொல்லி அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி அவருடைய சகோதரரான இறந்துபான ராமசாமியின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் தாவா சொத்தில் பாகம் கேட்டு அ.வ.எண்.615/2016 என்ற பாக தாவாவை தாக்கல் செய்து அந்த வழக்கில் இந்த 5ம் பிரதிவாதிக்கு 2/3 பங்கு பாத்தியம் என்று 4.2.2017 தேதியில் தீர்ப்பாகி உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் எனக்கு எந்தவித பங்கும், பாத்தியமும் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான், எனது அப்பா பெயரில் உள்ளது.

4. தாவா சொத்துக்கள்ள முழுவதும் பழனிசாமி, ராமசாமி, சுப்பிரமணி ஆகியோர்களின் பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பட்டு, அதன்பேரில் அவர்கள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றும், அதன் பின்னிட்டு சுப்பிரமணியம், பழனிசாமிக்கும் 27.03.2000 தேதியில் ஒரு விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்றும்,

அதனடிப்படையில் பழனிசாமி இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.615/2016 என்ற பாக தாவாவை தாக்கல் செய்து 04.02.2017 தேதியில் முதல் நிலை தீர்ப்பாணை பெற்றார் என்றும், பின்னிட்டு பழனிசாமி இறந்துபோய்விட்ட நிலையில் அவரது வாரிசுகளான 7, 10 முதல் 12 பிரதிவாதிகள் பொதுவில் 2/3 பங்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றும், மீதமுள்ள 1/3 பங்கு சொத்தை இறந்துபோன ராமசாமியின் வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதனால் நான் எனது சகோதரர்களின் அனுமதியின் பேரில்தான் தாவா சொத்தில் ஒரு பகுதியில் வசித்து வருகிறேன் என்றும், இந்த நிலையில் நான் தாவா சொத்தில் நான் எவ்வித பாத்திய உரிமையும், அனுபவமும் கோர முடியாது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.03 14:19:48 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**